**செய்தி வெளியீடு எண்: 23/2022** **நாள்: 20.03.2022**

**பத்திரிக்கை செய்தி**

**மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற செயலாளரும், மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைவருமான திரு. மனோஜ் ஜோஷி, இ.ஆ.ப., இன்று (20.03.2022) இரண்டாம் கட்ட மெட்ரோ இரயில் பணிகளை ஆய்வு செய்தார்**

மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற செயலாளரும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைவருமான திரு. மனோஜ் ஜோஷி, இ.ஆ.ப., இன்று (20.03.2022) சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்டப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை மெட்ரோ இரயில் கட்டம்-2 இரயில் பாதை 3-ல் மாதவரம் முதல் சோழிங்க நல்லூர் வரை 25 கி.மீ தூரத்திற்கு நடைபெற உள்ளது. இதில் திருவான்மியூர் பகுதியில் சுரங்கப்பாதை அமைப்பதற்கான ஆயுத்தப் பணிகளை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை செயலாளரும் மெட்ரோ இரயில் நிறுவன தலைவருமான மனோஜ் ஜோஷி பார்வையிட்டார். இந்தசுரங்கப்பாதையில் 17 மெட்ரோ இரயில் நிலையங்களும் இரயில் செல்வதற்க்கும் வருவதற்குமான இரயில் பாதை 25 கி.மீ தூரத்திற்கு அமையவுள்ளது. இதன் திட்ட மதிப்பீடு ரூ.2,732 கோடி ஆகும். சுரங்கப்பாதை அமைக்கும் போது அப்பகுதியில் உள்ள கட்டிடங்கள், குடியிருப்பிகள் பாதிக்காத வகையில் மண் சரிவு ஏற்படாத வகையில் அதற்கான பாதுகாப்பு சுவர் அமைக்கும் பணி நடைபெற உள்ளது. இந்த பாதுகாப்பு சுவர் அமைப்பதன் மூலம் சுற்றுப்புற கட்டிடங்களுக்கு பாதிப்பு ஏற்படாது. சுரங்கப்பாதை அமைப்பதற்கு எளிதாக இருக்கும் மேலும் அப்பகுதியில் போக்குவரத்து இடையூறு இருக்காத வகையில் பணிகள் நடைபெறுவதையும் நடைபெறவுள்ளதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனை தொடர்ந்து சென்னை மெட்ரோ இரயில் கட்டம்-2-ல் இரயில் பாதை 4-ல் கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி மெட்ரோ வரை 46 கி.மீ. தூரத்தில் அமைக்கப்பட்டு வரும் உயர்மட்ட சுரங்கப்பாதை பணிகள் குறித்து மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை செயலாளரும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைவருமான திரு. மனோஜ் ஜோஷி, இ.ஆ.ப., பார்வையிட்டு ஆய்வு செய்தார். இப்பணியில் கலங்கரை விளக்கம் முதல் கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் வரை 10 கி.மீ தூரம் சுரங்கப்பாதையும், கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் முதல் பூந்தமல்லி மெட்ரோ வரை 16 கி.மீ தூரம் வரை உயர்மட்ட இரயில் பாதை அமையவுள்ளது. இப்பணி ரூ.6700 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது. உயர்மட்ட இரயில் பாதை அமைப்பதற்கான தூண்கள் தொல்லியகரம் (போரூர் இராமச்சந்திரா மருத்துவமனை அருகில்) பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதை மத்திய செயலாளர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மத்திய செயலாளருடம் தமிழக அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை கூடுதல் தலைமை செயலாளர் திரு. சிவ்தாஸ்மீனா இ.ஆ.ப.,, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திரு. டி. அர்ச்சுனன் (திட்டங்கள்), திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்
சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.